**பாணந்துறை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாணந்துறை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நியமத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறைமைக்கு இணங்க மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டது. | | |
| • நீண்டகால கடன் பெற்றுக் கொள்ளல் ரூபா 20,000,000 காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்படாமையால் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| • | மீளாய்வாண்டில் செயற்திட்டத்திற்காக கிடைத்த மூலதன மானியம் ரூபா 110,549,823 தொகை நிதி செயற்பாடுகளாக காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| • | மீளாய்வாண்டில் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 5,245,605 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பதியப்படாமையால் ஆண்டில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 6,561,844 மற்றும் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் மிகை / பற்றாக்குறை இனங்கண்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | நியமத்தின் 6.3 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 266,798,885 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் 6.15 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமானத்தேய்வு முறைமையொன்றை தெரிவு செய்து பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து முடிவடையாதிருந்தமையால் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. | சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கம்பெக்டர் இற்காக செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் ரூபா 2,790,000 கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அது மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கம்பெக்டர் இற்காக நீதிமன்ற தண்டப்பண் மற்றும் முத்திரைக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 2,790,000 தொகை பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களில் குறைக்காமையால் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 104,899,784 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 80,000,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிவதில் உள்ள வழுக்களினால் ஏற்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 81,000,000 மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் வருமானத்தில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையால் மிகை அப்பெறுமானத்தால் குறைவடைந்திருந்தது. | எதிர்காலத்தில் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் வருமானத்தில் செலவு வைக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த நூலகப் புத்தகங்கள் ரூபா 83,474 தொகை மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிக்கவில்லை. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (ஊ) | கழிவுகளை அகற்றுவதற்காக தனியார் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,750,000 கடன்கொடுத்தோர் ஒதுக்கீட்டிற்குப் பதிலாக ரூபா 3,625,000 ஒதுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | செலுத்த வேண்டிய முத்திரை வரி ரூபா 39,660 இற்கு பதிலாக அது ரூபா 34,060 ஆக ரூபா 5,600 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டில் பொதுக் களஞ்சிய பொருட்கள் ரூபா 15,142,601 மற்றும் மின்சார களஞ்சியப் பொருட்கள் ரூபா 6,783,704 கொள்வனவு செய்தல் இருப்புக் கணக்குகளில் வரவு வைத்து காசேட்டில் செலவு வைக்கப்பட்ட போதும் அது திரண்ட நிதியக் கணக்கிடம் அப்பெறுமானத்தால் செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | பொதுக் களஞ்சியம் மற்றும் மின்சாரக் களஞ்சியம் விநியோகித்தல்கள் செலவினம் ரூபா 21,763,509 விரிவான வருமானக் கூற்றில் வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | 03 அலுவலக உபகரணங்களில் ரூபா 1,646,808 பொதுக் களஞ்சியம் மற்றும் மின்சாரக் களஞ்சிய இறுதி இருப்பு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | இனங்காணப்படாமல் மின்சார களஞ்சிய இருப்பில் ரூபா 6,197,995 அகற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டில் சம்பள மீளளிப்பு மற்றும் உறுப்பினர் படி பெறுவனவுகள் ரூபா 116,158,650 மாற்றல்கள் கொடுக்கல் வாங்கல்களாக செலவு வைத்து கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிலுவையாகவிருந்த ஏனைய வருமானக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (க) | மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக 2020 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காக கிடைத்த மூலதன மானியம் ரூபா 81,965,809 மீதியின் அடிப்படையில் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு விகிதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்து ஆண்டின் வருமானத்தில் இனங்காணல் மற்றும் மூலதன மானியத்தில் பதிவழிக்கும் செயற்பாடுகளாக இருந்த போதும் மீளாய்வாண்டில் அது மேற்கொள்ள்பபட்டிருக்க வில்லை. | ஆண்டின் வருமானத்தில் இனங்காண்பதற்கும் மூலதன மானியங்களில் பதிவழிக்கப்படாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (கா) | மீளாய்வாண்டில் ஆதனவரி சிட்டையில் ரூபா 29,304,163 மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களுக்கு கிடைத்த வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (கி) | மீளாய்வாண்டில் ஆதனவரிக்காக வழங்கப்பட்ட கழிவு மற்றும் பிடியாணைக் கட்டணம் ரூபா 1,463,426 விரிவான வருமானக் கூற்றில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | வெளிவாரி நிதியேற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டில் கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 33,801,884 மூலதன மானியத் தொகை மூலதன மானியக் கணக்கில் செலவு வைத்து வேலை கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மூலதன மானியக் கணக்கில் ரூபா 110,549,823 செலவு வைத்து வேலை கடன்பட்டோர் கணக்கில் அப்பெறுமானத்தால் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கு) | முன்னைய ஆண்டில் வெளிவாரி நிதியேற்பாடு மற்றும் சபை நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ரூபா 111,095,514 செயற்திட்டம் சொத்துக்களின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு விகிதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (கூ) | வெளிவாரி நிதியேற்பாடு கடன்கொடுத்தோர் ரூபா 33,801,884 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்த வேண்டியதாக இனங்கண்டு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைத்து உரிய நிலையான சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (கெ) | மீளாய்வாண்டில் சபை செயற்திட்டங்களுக்காக செலுத்தப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிக் காணப்பட்ட ரூபா 145,514,987 தொகை சபை வேலை கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைத்து உரிய நிலையான சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கே) | 2021 ஆம் ஆண்டின் செலவின கடன்கொடுத்தோர் (வேலைக் கடன்கொடுத்தோர் தவிர) ரூபா 137,082,552 உரிய செலவினக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கை) | மீளாய்வாண்டில் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்த கடன்தொகை ரூபா 20,000,000 செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (கொ) | மீளாய்வாண்டில் ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் பிணை வைப்பு முதலீடு ரூபா 53,071 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கோ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,734,864 வட்டி வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (கௌ) | மீளாய்வாண்டில் ஊழியர் கடன் வட்டி வருமானம் ரூபா 1,510,741 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 32,937 ஆக ரூபா 1,477,804 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ச) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,399,571 தொகை கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 1,313,438 ஆக ரூபா 86,133 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (சா) | மீளாய்வாண்டில் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,313,438 தொகை செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அது பற்றாக்குறை மற்றும் மிகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (சி) | மீளாய்வாண்டில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத 02 நலன்புரி செயற்திட்டங்களுக்காக ரூபா 6,000,000 கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்டுள்ளது. | கடப்பாடுகளுக்காக மாத்திரம் கடன்கொடுத்தோர் ஒதுக்குதல் வேண்டும். |
| (சீ) | நிலுவையாகவிருந்த ஏனைய வருமானக் கணக்கின் மீதி ரூபா 94,752,754 தொகை நிலுவை வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் இடையே ரூபா 17,956,271 வேறுபாடு காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களும் பட்டோலைகளுக்கும் இடையே வேறுபாடுகளை சீராக்கியமை இதற்கு காரணமாக இருந்தது. | நிதிக்கூற்றுக்களின் மீதியும் பட்டோலைகளின் மீதியும் சமனாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 95,803,561 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,679,395 ஆகும்.

## 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை ஆதனவரி ரூபா 29,794,352 தொகைக்கிடையே கெசல் வத்த உப அலுவலக அதிகாரப்பிரதேசத்தில் 474 ஆதனவரி உரிமையாளர்களிடமிருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 4,406,656 நிலுவை மீதியாகும். | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் அறவிட வேண்டிய சந்தை நிலைய வாடகை வருமானம் ரூபா 4,589,663 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,261,713 தொகை அதாவது 93 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதற்கிடையில் அந்த மீதியில் கெசல்வத்த பொலிஸ் நிலையத்தில் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 2,434,612 தொகையும் இருந்தது. | நிலுவை வியாபார நிலைய வாடகைகளில் அதிக அளவு கெசல்வத்த பொலிஸ் நிலையத்திற்குரிய நிலுவையாக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளித்தரப்பினருக்கு கழிவுகளை அகற்றுவதற்கு வழங்குதல் | | |
| தனியார் கம்பனியொன்றுக்கு 2021 ஆம் ஆண்டில் உக்கும், உக்காத கலப்பு கழிவுப்பொருட்களாக ரூபா 1,164 டிப்பர் லோட் அகற்றுவதற்காக ரூபா 29,100,000 | | |

செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | தேசிய பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 மற்றும் 7.11.1 பிரிவின் பிரகாரம் கூறுவிலை திறக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் பெறுகைகள் கையளித்தல் பரிந்துரை வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட குழு நியமிக்கப்பட்டு மதிப்பீடு செய்து தொழில்நுட்ப தீர்மானம் ஒன்று எடுக்காமல் பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் மூலம் மாத்திரம் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | 2020 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் மற்றும் விரைவாக பணிகளை நிறைவேற்ற வேண்டியிருந்தமையாலும் 2021 இன் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்து தொழில்நுட்ப பரிந்துரை பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | வழங்குனருடன் 2021 சனவரி 01 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | உக்கும், உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக தனித்தனியாக கூறுவிலை கோரப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் வழங்குனருடன் உடன்படிக்கை கையொப்பம் இடும் போதும் உக்கும், உக்காத கழிவுகளுக்காக தனித்தனியாக கூறுவிலை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக 03 கியூப் டிப்பர் 01 லோட் அகற்றுவதற்காக ரூபா 25,000 உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | உக்கும், உக்காத கழிவுகளுக்காக தனித்தனியாக கூறுவிலை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக எதிர்ப்பு சமர்ப்பிப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | உக்கும் மற்றும் உக்காத கழிவுகளுக்காக தனித்தனியாக கூறுவிலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்காக 03 உப அலுவலகங்களால் 15 | கழிவுகளை அளவிடுவதற்காக பாலம் தராசு கொள்வனவு | கழிவுப் பொருட்களை அகற்றும் போது |

| | | | |
|---|---|---|---|
| | டிறக்டர் வண்டிகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஒரு வாகனத்திலிருந்து சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் இறுதியாக அகற்றுவதற்காக கெசல்வத்த கழிவுப் பொருள் நிலையத்திற்கு போக்குவரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தனியார் பிரிவினால் அகற்றும் போது அளவிடப்பட்டு அகற்றும் முறைமையொன்றை தயாரிப்பதற்கு பதிலாக டிப்பர் லோட்டின் பிரகாரம் அகற்றுவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | செய்வதற்கு கணிசமானகிரயம் செய்ய வேண்டியேற்பட்டிருந்தது. | அளவிடுவதற்காக முறையான திட்ட முறைமையொன்று தயாரித்தல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் தனியார் நிறுவனமொன்றினால் 09 டிப்பர் வண்டிகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த டிப்பர் வண்டிகளின் இயலளவு சபை உத்தியோகத்தரால் அளவிடல் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு 2022 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கேள்வி சமர்ப்பிக்கும் போது வாகன இயலளவு குறிப்பிடப்பட்டுள்ளது. | டிப்பர் வண்டிகளின் இயலளவை அளவிட்டு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |